# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2514/04 - 2026 නොවැම්බර් මස 09 වැනි සඳුදා - 2026.11.09

2514/04 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

06 ஆம் திருத்தம்

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்ட 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதியுடைய 1885/38 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பானது பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றித் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் படி,

**நாலக களுவெவ**
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

2026, நவெம்பர் 06.

**பகுதி I**

திருத்த இலக்கம் 01- 2019, ஏப்பிறல் மாதம் 22 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2120/2 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2021, நவெம்பர் மாதம் 24 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2255/14 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 03 - 2025, யூலை மாதம் 08 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2444/21 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 04 - 2026, யூன் மாதம் 19 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2493/61 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 05 - 2026, செத்தெம்பர் மாதம் 21 ஆம் திகதியிடப்பட்ட மற்றும் 2507/02 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

**பகுதி II**

13.8 "கல்விமானி பட்டதாரி" எனப்படுவது, பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள அல்லது வேறு விசேட பாராளுமன்றச் சட்டங்கள் மூலமாகத் தாபிக்கப்பட்டுள்ள பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள்/ பல்கலைக்கழகங்கள் ஊடாக அல்லது பல்கலைக்கழகச் சட்டத்தின் 25அ பிரிவின் கீழ் உயர் கல்விக்குப் பொறுப்பான அமைச்சரால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் ஊடாகப் பின்வரும் நியதிகளுடன் கூடிய கல்விமானி பட்டச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட நபரைக் குறிக்கும்:

i. 04 வருட முழுநேர Onsite (நிகழ்நிலை அல்லாத) பட்டப் பாடநெறியாக இருத்தல்.

ii. பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 120 பாடத் தொகுதிகளைப் (120 Credits) பூர்த்தி செய்துள்ளவராக இருத்தல்.

iii. அரசாங்க தேசிய அல்லது மாகாணப் பாடசாலை ஒன்றில் அல்லது அரசாங்கத் தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலை ஒன்றில் குறைந்தபட்சம் 10 வார காலச் செய்முறை கற்பித்தல் பயிற்சியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அச்செய்முறை கற்பித்தல் பயிற்சியைத் தகுதி வாய்ந்த மேற்பார்வையின் கீழ்/ மேற்பார்வைக் குழுவின் கீழ் மேற்கொண்டுள்ளமை.

iv. பட்டப் பாடநெறிக்குள் குறைந்தபட்சம் 06 பாடத் தொகுதிகளைப் பூர்த்தி செய்யும் ஆராய்ச்சி ஆய்வறிக்கை/ அறிக்கை ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளமை.

EOG 11 - 0068